மு.சிவலிங்கத்தின் இலக்கியப்பணிகள்- ஒரு பார்வை

நா.சுதர்ஷினி
விரிவுரையாளர், மொழிகள் துறை, இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
இலங்கை

சுருக்கம்

ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில், குறிப்பாக மலையக இலக்கிய வரலாற்றில் 1960-கள் ஒரு முக்கியமான காலகட்டமாகும். சாதியொழிப்பு, வர்க்கப் போராட்டம் மற்றும் உழைக்கும் மக்களின் உரிமைச் சவால்கள் போன்ற பல உள்ளடக்கங்களைத் தமது எழுத்துகளின் வழி இலக்கியத்தின் மையப்பொருளாக மாற்றிய பெருமை இக்காலகட்டத்துப் படைப்பாளர்களைச் சேரும். அவ்வகையில், இக்காலகட்ட இலக்கியக்கர்த்தாக்களுள் ஒருவரான மு.சிவலிங்கம் படைப்பிலக்கியங்களின் வாயிலாகத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பையும், அவரது படைப்புகளின் உள்ளடக்கத்தையும் மதிப்பீடு செய்யும் நோக்கில், 'மு.சிவலிங்கத்தின் இலக்கியப்பணிகள் - ஒரு பார்வை' எனும் தலைப்பில் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அவரது சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், மொழிபெயர்ப்புகள் மற்றும் அரசியல்-சமூகப் பதிவுகள் வழி வெளிப்படும் கருத்தியல் வெளிப்படுத்துவதோடு, ஈழத்து இலக்கியப் பரப்பில் அவரது தனித்துவமான ஆளுமையையும் வகிபாகத்தையும் மதிப்பிடுகிறது. மலையக மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டுக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டு, வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமன்றிச் சமுதாய வளர்ச்சிக்கு வழிகாட்டும் நோக்கோடு இவரது படைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. நாவல்கள், சிறுகதைகள் உள்ளிட்ட இவரது படைப்புகள் மலையகத்தின் அறியப்படாத வாழ்வியல் பதிவுகளைக் காலத்தைக் கடந்து நம் கண்முன் நிறுத்துகின்றன. காலத்திற்கேற்ற கருப்பொருள்களைக் கொண்டு அன்றாட வாழ்வின் யதார்த்தங்களைப் படைப்புகளின் வழி தந்த மு.சிவலிங்கத்தின் இலக்கியப் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அத்துடன், மலையகம் சார்ந்த பதிவுகள் மட்டுமன்றிப் பிற பிரதேசங்கள் மற்றும் பொதுவான சமூகப் பிரச்சினைகள் குறித்தும் இவர் தனது படைப்புகளில் பதிவு செய்துள்ளமை கவனத்திற்குரியது.

திறவுச் சொற்கள்: *இலக்கியம், இலக்கியக் கர்த்தாக்கள், மலையகம், மு.சிவலிங்கம்*

I. அறிமுகம்

சிறுகதைப் படைப்பாளர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், பத்திரிகையாளர் விமர்சகர் என்று பல்வேறு துறைகளிலும் தன்னுடைய திறமையை வெளிப்படுத்தியுள்ள மு.சிவலிங்கம் தன்னுடைய வாசிப்பு முயற்சியே ஆசிரியரின் இத்தகைய ஆற்றல் விருத்திக்குக் காரணம் என்கிறார். சிறுவயது முதலே வாசிப்பில் அதிக ஆர்வம் கொண்டிருந்தாகவும் தரம் ஏழில் கற்கும் காலம் முதற்கொண்டே இந்தியாவில் வெளிவந்த சிறுவர் பத்திரிகைகளான கரும்பு, கண்ணன், அம்புலிமாமா, கற்கண்டு போன்றவற்றையும் இலங்கையில் வெளிவந்த சிறுவர் பத்திரிகைகளான நாடோடி, வெற்றிமணி, ஈழமணி, போன்றவற்றையும் தொடர்ந்து வாங்கிப்படிக்கும் பழக்கமுடையவராகக் காணப்பட்டுள்ளார். அதே நேரம் பத்திரிகைகளில் வரும் வினாவிடைப் போட்டிகளுக்கு பதில் எழுதுதல், கவிதைகள் எழுதுதல் போன்ற நடவடிக்கைகளிலும் ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டுள்ளார். தரம் ஒன்பதில் (SSC) கல்வி கற்றபோது அவரது ஆங்கிலப் பாட ஆசிரியர், ரூடியாட் கிப்லிங் என்பரால் எழுதப்பட்ட 'IF' எனும் கவிதையைப் பற்றிக் கற்பித்த போது அக்கவிதை மீது ஏற்பட்ட விருப்பத்தினால் அதனை தமிழ்மொழியில் மொழிபெயர்த்துள்ளார்.

மேலும், ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் சாதாரண தரத்தில் கல்வி கற்கும் போது 'தமிழோசை' எனும் பாடசாலைப் பத்திரிகையின் பத்திராதிபதியாக இருந்துள்ளார். பிற்பட்ட காலங்களில் வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, தினபதி போன்ற பத்திரிகைகளில் சிறுவர் பக்கங்களுக்காக ஆக்கங்களை எழுதியுள்ளார். தனது உயர்தர கல்விசார் கற்றல் செயற்பாடுகள் நிறைவுற்று பெறுபேற்றுக்காக காத்திருந்த சந்தர்ப்பத்தில் 'வீரகேசரி' பத்திரிகையில் கடமையாற்றும் பொருட்டு தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டுள்ளார். நேர்முகத்தேர்வில் பங்கேற்றபோது பத்திரிகையில் வெளிவந்த இவரது படைப்புகள் சார்ந்த தொகுப்பினை மதிப்பீட்டுக் குழுவிடம் கையளித்த போது இவரது படைப்பாற்றல் கண்டு பாராட்டியோர் இவருக்கான தொழில் வாய்ப்பினை வழங்கியுள்ளனர். இவ்வாறாக, இப்பத்திரிகையுடன் இணைந்த பின்னர் ஆசிரியர் தனது முதலாவது சிறுகதையினை "கூலி" எனும் தலைப்பில் எழுதியுள்ளார். அடுத்ததாக "சுமைதாங்கி" எனும் தலைப்பில் சிறுகதையினை எழுதியுள்ளார். இச்சிறுகதை மலையக மக்களின் பிரஜாவுரிமை தொடர்பான பிரச்சினையைக் கருவாகக் கொண்டிருந்ததோடு கேசரி வார இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையில் வெளிவந்த பல

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2026, IRJTSR

பத்திரிகைகளிலும் தனது சிறுகதைகளை வெளியிட்டுள்ள இவர் தமிழகத்திலிருந்து வெளிவந்த கணையாழி, தீபம், சுபமங்களா, முத்தாரம் போன்ற பல சிறுகதைகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவற்றைத் தொடர்ந்து ஆசிரியரின் படைப்புகள் பின்வருமாறு காணப்படுகின்றன.

II. **நாவல்**

படைப்பாளர் மு.சிவலிங்கம் தனது முதலாவது நாவலாக **"பஞ்சம் பிழைக்க வந்த சீமை"** எனும் நாவலைப் படைத்துள்ளர். இந்நாவல் 2015 ஆம் ஆண்டு படைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அது தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் கூலி தொழிலாளிகளாக அழைத்து வரப்பட்டதிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட வரலாற்று நாவலாகவே காணப்படுகின்றது. அதனையடுத்து **"உயிர்"** நாவல் 2018ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நாவலானது முழுமையாக ஒரு வைத்தியசாலையினுள் இடம்பெறும் செயற்பாடுகளை எடுத்துரைக்கும் வகையிலான படைப்பாகக் காணப்படுகின்றது.

III. சிறுகதை

ஆசிரியரின் சிறுகதைப்படைப்புகள் யாவும் தொகுப்புக்களாகவே வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் முதலாவது தொகுப்பாக "**மலைகளின் மக்கள்**" 1992 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. இத்தொகுப்பு நூல் பதின்மூன்று சிறுகதைகளின் தொகுப்பாகக் காணப்படுகின்றது. அடுத்ததாக **"ஒரு விதை நெல்"** எனும் சிறுகதைத் தொகுப்பு 2005ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்நூலில் பதினைந்து சிறுகதைகள் காணப்படுகின்றன.

ஆசிரியரின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பான **"ஒப்பாரிக் கோச்சி**" பதினாறு கதைகளை உள்ளடக்கியதாக 2010ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. இச்சிறுகதைத் தொகுப்பானது அதற்கு முன்பு வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுப்புகளிலிருந்து சற்று வித்தியாசமானதாகக் காணப்படுகின்றது. அதாவது முன்பு வெளியிடப்பட்ட சிறுகதைகள் மலையக சமூகத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்பட்டன. ஆனால், இந்நூலின் சில சிறுகதைகள் வடகிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையைச் சித்தரிக்கும் வகையில் அமைந்துள்ளன. இச்சிறுகதைத் தொகுப்பின் இரண்டாம் பதிப்பு இலண்டனில் உள்ள சமூக இயன் பதிப்பகத்தின் ஊடாக 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி வெளிவந்துள்ளது.

"வெந்து தணிந்தது காலம்" மு.சிவலிங்கம் அவர்களின் நான்காவது சிறுகதைத் தொகுப்பாக 2013ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது இச்சிறுகதைத் தொகுப்பும் ஒப்பாரிக்கோச்சிக்கு எனும் சிறுகதைத்தொகுப்பு நூலுக்கு நிகரான ஒரு படைப்புவே காணப்படுகின்றது. மலையகச் சமூகத்தைப் போலவே வடகிழக்கு வாழ் மக்களின் வாழ்க்கைப் பின்னணியைப் பற்றிக் கூறும் வகையிலான சிறுகதைகளையும் உள்ளடக்கியதாகவே காணப்படுகின்றது.

"சிறுவர் பண்ணைகள்" எனும் சிறுகதைத் தொகுப்பு ஆசிரியரின் அடுத்த படைப்பாகும். இந்நூல் 2016 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இத்தொகுப்பு, இன்று நமது நாட்டிலிருந்து உலக நாடுகள் வரை வாழும் சிறுவர்கள் மீது மனிதர்களினால் திணிக்கப்படும் கொடூரங்களை பற்றி முழுமையாக கவனத்தைச் செலுத்தி படைக்கப்பட்ட படைப்பிலக்கியமாகும். இது சுமார் பன்னிரண்டு சிறுகதைகளை உள்ளடக்கிய நூலாகும். இந்நூல், மலையகம், வடகிழக்கு பகுதிகள் சார்ந்த உள்ளடக்கங்களின் தொகுப்பாக இந்நூல் காணப்படுகின்றது.

இதுவரையில் வெளிவந்துள்ள ஆசிரியரின் படைப்புகளில் இறுதியாக வெளிவந்த சிறுகதைத் தொகுப்பாக **"ஒரு மழைகாலத்து வெயில்**" காணப்படுகின்றது. இப்படைப்பு 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கதாகும். மலையகம் சார்ந்த கதைகளுடன் வடகிழக்கு வாழ் மக்கள் பற்றிய கதைகளையும் உள்ளடக்கிய சிறுகதைத் தொகுப்புகளின் வரிசையில் ஒரு மலைகாலத்து வெயில் எனும் இப்படைப்பும் இணைந்துள்ளமைக் குறிப்பிடத்தக்கது. 2017ஆம் ஆண்டில் **"வழித்துணை"** எனும் பெயரில் சிறுகதை ஒன்றையும் எழுதியுள்ளார். அதனைத் தொடர்ந்து, 'கிட்னி கிடைக்கும் இடம்' எனும் சிறுகதை 2024

ஆம் ஆண்டு பெப்ரவரி நான்காம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு ஆசிரியரின் 'பிச்சைக்காரன்' எனும் சிறுகதை 2024 ஆம் ஆண்டு மார்ச் 03 ஆம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவை ஆசிரியரின் அண்மைக் கால படைப்புகளாகக் காணப்படுகின்றன.

IV. கவிதைகள்

ருடியார்ட் கிப்ளிங் இன் "IF" கவிதையினைத் தழுவி தரம் ஒன்பதில் கல்வி கற்கும் காலப்பகுதியில் எழுதிய கவிதையினைச் செம்மை செய்து 1961 இல் தினகரன் பத்திரிகையின் 'புதன்மலர்' இல் "ஆனால்" எனும் தலைப்பில் வெளியிட்டுள்ளார். இதுவே ஆசிரியரின் முதல் கவிதையாகும். அதனைத் தொடரந்து குறிஞ்சிக்கும்மி, குறிஞ்சி வாழ் கோதை போன்ற பல கவிதைகளைப் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளார்.

V. மொழிப்பெயர்ப்பு முயற்சிகள்

"தேயிலை தேசம்" ஆசிரியரின் மொழிப்பெயர்ப்பு நூலாகும். இந்நூல் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களால் படைக்கப்பட்ட 'Born to Labour' எனும் படைப்பின் தமிழாக்கமாகும். 2003 ஆண்டில் இம்மொழிபெயர்ப்பு நூல் வெளியிடப்பட்டுள்ளது.

VI. பிறபடைப்புகள்

"மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள்" (பல்வகைச் சேர்க்கை) எனும் தொகுப்பு நூலானது 2007 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இப்படைப்பானது மலையக மக்களின் நாட்டார் பாடல்களைத் தொகுத்து தரும் வகையில் அமைகின்றது.

VII. பத்திரிகைகளில் வெளிவந்துள்ள கட்டுரைகள்

மு.சிவலிங்கம் இதழியல் துறையில் தீவிரமாக இயங்கிய காலத்தில், சமூக, அரசியல் மற்றும் கலாசாரப் பிரச்சினைகள் குறித்துத் தன் கருத்துக்களைக் கட்டுரைகள் வாயிலாகத் தொடர்ச்சியாகப் பதிவு செய்துள்ளார்.

2020 ஆம் ஆண்டு வெளியான "புதிய காற்று படத்தில் மாயாண்டி தோட்டத் தலைவராக மு.சிவலிங்கம்" எனும் கட்டுரையில், 'புதிய காற்று' திரைப்படத்தின் உருவாக்கப் பின்னணி குறித்து விளக்கியுள்ளார். இத்திரைப்படம் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வீடற்ற நிலையை முதன்மைப் பொருளாகக் கொண்டு படைக்கப்பட்டதை விவரிப்பதோடு, படக்காட்சிகளின் இயல்புத் தன்மை மற்றும் நடிகர்களின் பங்களிப்பு குறித்தும் தன் அனுபவங்களைப் பகிர்ந்துள்ளார் (சிவலிங்கம், 2020).

2018 ஆம் ஆண்டு எழுதிய "தொழிற்சங்க அரசியல்வாதிக்கு எதிராகத் தடைச்சட்டம் உருவாக்கப்பட வேண்டும்" எனும் கட்டுரையில், மலையகத் தொழிற்சங்கங்களின் கட்டமைப்பு குறித்துப் பின்வருமாறு விமர்சித்துள்ளார்: "மலையகத் தொழிற்சங்க முறைகள் வித்தியாசமாகவும் விசித்திரமாகவும் காணப்படுகின்றன. பண வசதியுள்ள தனிநபர்களே சங்கங்களை உருவாக்கி, அச்சங்கங்களின் ஏகபோக உரிமையாளர்களாக இருக்கின்றார்கள். தொழிற்சங்கங்களைத் தாங்களே உருவாக்காத தொழிலாளர்கள் அச்சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேருகின்றார்கள். சங்க உரிமையாளர் கோரும் சந்தாப் பணத்தைத் தொழிலாளரின் சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்வதற்கு வசதிகள் செய்துகொள்கின்றனர். தொழிலாளர்கள் தங்கள் சங்கத் தலைவரை "ஐயா" என்றும் "சேர்" என்றும் கைகட்டி ஒடுங்கி நிற்கின்றனர். அங்குத் தோழமை கிடையாது! சங்க உரிமையாளருக்குத் தோட்டத் தலைவர்களை மாற்றவோ நீக்கவோ உரிமை இருக்கிறது." (சிவலிங்கம், 2018). இவ்வகையில், தொழிற்சங்கங்களாக உருவெடுக்கும் அமைப்புகள் பின்னநாட்களில் அரசியல் கட்சிகளாக மாறுவதையும், தொழிற்சங்கத் தலைவர்கள் அக்கட்சியின் தலைவர்களாகப் பரிணமிப்பதையும் சுட்டிக்காட்டும் மு.சிவலிங்கம், தொழிற்சங்கவாதிகள் நேரடி அரசியலில் ஈடுபடுவதையும் தேர்தலில் போட்டியிடுவதையும்

சட்டப்பூர்வமாகத் தடை செய்ய வேண்டும் என்ற உறுதியான கோரிக்கையை இக்கட்டுரையில் முன்வைத்துள்ளார்.

2017 ஆம் ஆண்டு வெளியான "சட்டங்களுக்கு உட்பட்ட பிரஜாவுரிமையும் திணைக்களத்திற்கு உட்பட்ட ஆள்பதிவும் நீக்கப்பட வேண்டும்" எனும் கட்டுரை, அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கான தனிநபர் பிரேரணைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இக்கட்டுரையில், அரசியலமைப்பின் பிரகடனத்துக்கப்பால் 1948 முதல் 2009 வரையில் அமுலில் இருக்கும் பதினொரு வகை பிரஜா உரிமைச் சட்டங்கள் நீக்கப்படுதல், மலையகப் பிரஜைகள் பதிவுப் பிரஜைகளாக அடையாளப்படுத்தப்படாது, வம்சாவளிப் பிரஜைகளாக அடையாளப்படுத்தப்படுவதன் அவசியம், இந்தியத் தமிழர் அல்லது இந்திய வம்சாவளியினர் என்று அடையாளப்படுத்தப்படாது 'மலையகத் தமிழர்' என்று அடையாளப்படுத்தப்படுவதன் அவசியம், காணி உரிமை, தோட்டங்கள் கிராமங்களாக மாற்றப்படுவதன் அவசியம், மலையகத்திலும் தமிழ்மொழியை அரசகரும மொழியாக மாற்றுவதன் இன்றயமையாமை, அரசியலமைப்பின் பிரகடனத்துக்கப்பால் 1948 முதல் 2009 வரையில் அமுலில் இருக்கும் பதினொரு வகை பிரஜா உரிமைச் சட்டங்கள் நீக்கப்படுவதன் அவசியம் போன்ற பல பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (சிவலிங்கம், 2017)

2017 ஆம் ஆண்டு வெளிவந்த "மலையகச் சமூகம் எழுச்சி பெற இலக்கியவாதிகளே காரணம்" எனும் கட்டுரையில், மலையகத்தின் அவலங்களையும் தேவைகளையும் அரசியல்வாதிகளைக் காட்டிலும் இலக்கியவாதிகளே மக்களிடம் கொண்டு சேர்த்துள்ளனர் என்பதை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் தமிழ் திரைப்படத்துறை குறித்துக் குறிப்பிடுகையில்:

"வடக்கு-கிழக்குத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் மற்றும் சமூக, அரசியல் சம்பந்தமாக இயக்குநர் புகழேந்தியின் "காற்றுக்கென்ன வேலி" திரைப்படமும், இயக்குநர் மணிரத்னத்தின் "கன்னத்தில் முத்தமிட்டால்" திரைப்படமும் வெளியாகியுள்ளன. நடிகர் கமலஹாசன் யாழ்ப்பாணத் தமிழில் பேசி நடித்த "தெனாலி" திரைப்படமும் வெளிவந்தது. ஆனால், தென்னாட்டுத் தமிழர்களின் பூர்வீகக் குடிகளான இந்திய வம்சாவளி மலையக மக்கள் சம்பந்தமான திரைப்படம் எதுவும் வெளிவரவில்லை." (சிவலிங்கம், 2017).

எனக் குறிப்பிட்டுத் தன் ஆதங்கத்தைப் பதிவுசெய்துள்ளதோடு, மலையகம் குறித்துத் தொலைநோக்குச் சிந்தனை கொண்ட தலைவர்கள் உருவாக வேண்டியதன் அவசியத்தையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

தொடர்ந்து அதே ஆண்டு "டாக்டர் சுப்பிரமணிய சுவாமியுடனான நேர்காணல் பற்றி" எனும் கட்டுரையை எழுதியுள்ளார். இந்திய அரசியல்வாதி சுப்பிரமணிய சுவாமியின் நேர்காணலை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இக்கட்டுரையில், இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்கள் குறித்து இந்தியாவின் கடந்தகால மற்றும் தற்போதைய பார்வைகள் பற்றியும், மலையகத் தமிழர்கள் குறித்த சர்வதேச மாநாட்டின் முக்கியத்துவம் பற்றியும் பகிர்ந்துள்ளார்.

VIII. வலைப்பக்கக் கட்டுரைகளும் பதிவுகளும்

இணையம் மற்றும் சமூக ஊடகங்களின் வருகைக்குப் பின்னர், மு.சிவலிங்கம் அவர்கள் தனது வலைப்பக்கம் வாயிலாக மலையகச் சமூகம், அரசியல், இலக்கியம் மற்றும் வரலாற்றுப் ஆளுமைகள் குறித்துப் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளையும் பதிவுகளையும் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்துள்ளார். அவற்றின் உள்ளடக்கத்தின் அடிப்படையிலான வகைப்பாடு வருமாறு அமைகின்றது.

- மலையகம் சார்ந்த கட்டுரைகள்

2016 ஆம் ஆண்டு வெளியான "மலையக எழுச்சிக்கு சமூக அரசியலை முன்னெடுத்துச் சென்ற வீ.டி.தர்மலிங்கம்" எனும் கட்டுரையில், வீ.டி. தர்மலிங்கத்தின் அரசியல் தெளிவு குறித்துப் பின்வருமாறு

குறிப்பிட்டுள்ளார்: "அமரர் தர்மலிங்கம் தொழிற்சங்கப் பாணி அரசியல் செய்வதில் உடன்பாடு கொள்ளாத மனிதர் மலையக மக்களை வர்க்க ரீதியிலும் சமூக ரீதியிலும் ஒன்றுபடுத்தவே விரும்பியவர். அவர் தனது அரசியல் ஈடுபாட்டில் சில வேலைத் திட்டங்களை நிறைவேற்றாது நிராசைகளோடே மறைந்து போன துரதிஷ்டசாலியாவார்." (சிவலிங்கம், 2016).

2017 ஆம் ஆண்டு வெளியான "தேசிய அடையாளமின்றி அரசியல் விபரீதங்களைச் சந்திக்கும் இந்தியத் தமிழர்கள்" எனும் கட்டுரை, இந்திய வம்சாவளி மக்களின் குடிசன மதிப்பீடு தொடர்பில் எழுதப்பட்ட இரண்டு கட்டுரைகள் மீதான ஆசிரியரின் பார்வையை வெளிப்படுத்தும் வகையில் காணப்படுகின்றது. 'குடிசன மதிப்பீட்டின் போது மலையக மக்கள் தங்களின் தேசிய அடையாளத்தைச் சரியாகப் பதிவு செய்வதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. இதில், முறையான அடையாளப் பதிவின்மையால் இனங்களின் சனத்தொகைக்கேற்ப நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம், விகிதாசார வேலைவாய்ப்புகள் மற்றும் தேசிய நலன்களை இழக்க நேரிடும். இவ்வாறான அரசியல் ரீதியிலான பாதிப்புக்கள் பற்றியே மேற் குறிப்பிட்டுள்ள கட்டுரையாளர்கள் அறியத் தந்துள்ளனர்.' (சிவலிங்கம், 2017) எனக் கட்டுரையின் உள்ளடக்கம் குறித்து பதிவிட்டுள்ளார்.

2017 ஆம் "தமிழகத்தில் 28500 மலையக அகதிகள்" எனும் கட்டுரையை எழுதியுள்ளார். ஆசிரியரால், இலங்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அவசர வேண்டுகோள் கட்டுரை வடிவில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் வாழும் மலையக அகதிகளுக்கு இலங்கை குடியுரிமை வழங்கும் பொருட்டு மக்கள் விடுதலை முன்னணி சமர்பித்த பிரேரணையின் சட்டவரைவை அமுலாக்குவதற்கு முன்னர் மக்களின் விருப்பத்தைக் கண்டறிய வேண்டியதன் அவசியப்பாடும், விரும்பத்தினைக் கண்டறியாது வழங்கப்படும் குடியுரிமை ஏற்படுத்தக்கூடிய விளைவுகளையும் வெளிப்படுத்துகின்றது.

2019ஆம் ஆண்டு "மலையகத் தமிழரை இணைத்துக் கொள்ளாத தமிழர் பிரச்சினைகள் எதுவும் முழுமையடையாது" எனும் தலைப்பில் கட்டுரையொன்றினை எழுதியுள்ளார். அதேபோல 'ஜனாதிபதி வேட்பாளர்களிடம் மலையகக் கட்சிகள் முன்வைக்க வேண்டிய கோரிக்கைகளும் அவைகளுக்கான உடன்படிக்கைகளும்' எனும் தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையானது, பின்வரும் மூன்று கோரிக்கைகளை முன்வைப்பதாகக் காணப்படுகின்றது.

1. 200 ஆண்டுகளை அண்மிக்கும் எம் மக்களை பதிவு பிரஜை அந்தஸ்திலிருந்து வம்சாவளி பிரஜை அந்தஸ்துக்குள்ளாக்க வேண்டும். இது முதல் கோரிக்கையாகும்.
2. எமது தேசிய அடையாளம் "மலையகத்தமிழர்" என்று பதிவாக வேண்டும்.
   இதில் எமக்குள்ளே முரண்பாடுகள் இருப்பின் "இந்திய" என்ற சொல்லற்ற தனியான தேசிய அடையாளத்தைப் பதிவு செய்தல் வேண்டும். "இந்திய வம்சாவளியினர்" என்பது வரலாற்றுப் பாரம்பரியத்துக்குரிய சொல்லாகும். அது இன்னொரு நாட்டுச் சட்டத்துக்குள் வரவேண்டிய அவசியமில்லை. அது சட்டங்களுக்கப்பால் நிலைத்திருக்கும். இந்த தேசிய அடையாளக் குளறுபடியின் காரணமாக இன்று வரை நாட்டின் குடிசனத்தொகை மதிப்பீட்டில் மலையகத் தமிழரின் உண்மையான எண்ணிக்கை பதிவாக்கப் படவில்லை. மேற் குறிப்பிட்டுள்ள இரண்டு கோரிக்கைகளும் யாப்பு சீர்திருத்தத்துக்குள்ளானவைகளாகும்.
3. நாட்டின் தேசிய இருப்பை நிலை நிறுத்திக் கொள்வதற்கு எம் மக்கள் வாழ்வாதாரத்துக்கான நிலவுடைமை சமூகமாகவிருக்க வேண்டும். ஆகவே வாழ்வாதாரத்துக்கான நிலப் பங்கீடு எம்மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் (சிவலிங்கம், 2019).

2020 ஆம் ஆண்டு "தோட்ட நிர்வாகங்களை உலுக்கியத் தொழிற்சங்கவாதி" என்ற தலைப்பில் பதிவிட்டுள்ள கட்டுரையில் தொழிற்சங்கவாதி அமரர் எம். எஸ். செல்லச்சாமி பற்றிய பல விடயங்களைத் தொகுத்துத் தந்துள்ளதோடு தொழிற்சங்கவாதியாய் அமரர் செல்லையா சாதித்த விடயங்களைப் பட்டியலிட்டுள்ளார்.

மேலும், "இன்று உலக சிறுபான்மையின உரிமைத் தினம்" எனும் கட்டுரையில், மலையக மக்கள் எதிர்கொள்ளும் கட்டமைப்பு ரீதியான ஒடுக்குமுறைகள் குறித்துப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்: '1948 ம் ஆண்டு ஏவி விடப்பட்ட சட்டங்கள் முதல் 2009 ம் ஆண்டு வரை 12 சட்டங்கள் இவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளன. இவர்கள் ஏனைய மக்கள் போலல்லாது பதிவுப் பிரஜைகளாக கணிக்கப்பட்டுள்ளனர். பதிவு பிரஜைக்கும் வம்சாவளிப் பிரஜைக்கும் வேறுபாடுகள் இல்லையென்று அரசியல் யாப்பு அறிவித்தாலும் ஏன் இம்மக்களை இன்னும் பதிவு பிரஜைகளாகக் கணித்து வைத்திருக்கின்றது என்பதே எமது உரிமைக்கான கேள்வியாகும். இவர்கள் வாழும் பிரதேசங்கள் அரசுக்குரியவை. அரசு இவர்களது வாழ்விடங்களை கிராம மயமாக்க விரும்புவதில்லை. நாட்டில் உள்ளூராட்சிக்குள் இவர்களது வாழ்விடங்கள் உள் வாங்கப்பட வில்லை. இவர்களது உட்கட்டமைப்புக்கு உள்ளூராட்சி நிதி வழங்கப்படுவதில்லை. இன்று வரை தோட்டப் பிரதேசம் (Estate sector) என்றே இவர்களது வாழ்விடம் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றது. ' (சிவலிங்கம், 2020) என்ற வகையில் இம்மக்களின் பதிவு மற்றும் வாழிடம் சார்ந்த அவலங்களை முன்வைத்துள்ளார்.

- இலக்கிய விமர்சனங்களும் அறிமுகங்களும்

படைப்பாளனொருவன் தன்னுடைய படைப்புகள் தொடர்பில் மாத்திரம் சிந்திக்காது தன் சக படைப்பாளர்களின் படைப்புகளை வாசிப்பதும் அவை தொடர்பில் கருத்துகளை பகிர்ந்து கொள்வதும் மிகவும் அவசியமான பண்பெனலாம். இவ்வகையில், மு.சிவலிங்கம், 2020 ஆம் ஆண்டு "மல்லிகை சி.குமார்" எனும் கட்டுரையில், மல்லிகை சி.குமாரின் 'வேடத்தனம்' எனும் நூலை அறிமுகம் செய்து பின்வருமாறு எழுதியுள்ளார்:

"மல்லிகை சி.குமார் சிலரைப் போன்று இலக்கியம் "பண்ண" வந்தவரல்ல் மலையகச் சமூக முக்கியத்துவமும் சமூக ஆதங்கமுமே இவரது எழுத்தாகும். மலையக அரசியல் மற்றும் தொழிற்சங்கச் சீரழிவுகளை இலக்கியமாக்கியுள்ளவர்களுள் குமார் மிக முக்கியமானவர்." (சிவலிங்கம், 2020).

2020 ஆம் ஆண்டில், ஜெயசீலன் எழுதிய "மலையகத் தமிழ்ச் சிறுகதைகளில் மத்திய தர வர்க்கம்" மற்றும் சரவணகுமார் எழுதிய "மலையக இலக்கியத்தில் எதிர்ப்பு இலக்கியம்" ஆகிய கட்டுரைகள் குறித்த தன் விரிவான கருத்துப் பகிர்வை "மலையகத் தமிழ்ச் சிறுகதைகளில் மத்திய தர வர்க்கம்" எனும் தலைப்பில் இணையத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

- பிற உள்ளடக்கங்கள்

இலக்கியம் மற்றும் அரசியல் சார்ந்த கட்டுரைகள் மட்டுமன்றி, திரைப்பட விமர்சனங்கள் மற்றும் கலைத்துறை சார்ந்த பார்வைகளையும் மு.சிவலிங்கம் தனது வலைப்பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அந்தவகையில்,

2018 ஆம் ஆண்டு வெளியான "பரியேறும் பெருமாள்... சமூக எழுச்சியற்ற ஒரு கதாநாயகப் புரட்சி! பா.ரஞ்சித், மாரி செல்வராஜ் பார்வைக்கு...!" எனும் கட்டுரையில், சாதி ஒடுக்குமுறையைக் கருப்பொருளாகக் கொண்ட "பரியேறும் பெருமாள்" திரைப்படத்தைக் விமர்சனக் கண்ணோட்டத்துடன் அணுகியுள்ளார். இதில் நிலவும் யதார்த்தமற்ற தன்மைகளையும், வழக்கமான கதாநாயக மையப் போராட்டமாகத் திரைக்கதை நகர்த்தப்பட்டுள்ளமையையும் சுட்டிக்காட்டும் இவர், இதனால் கதையின் வலிமை குன்றிப்போயுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார் (சிவலிங்கம், 2018).

2020 ஆம் ஆண்டு வெளியான "விசாரணையும்.. அசுரனும்..." எனும் கட்டுரையில், "அசுரன்" திரைப்படம் சமூகத்தில் நிலவும் சாதி ஒடுக்குமுறைகளைச் சிறந்த முறையில் எடுத்துக்காட்டியுள்ளதாகப் பாராட்டியுள்ளார். மேலும், நாவல்களாகப் படைக்கப்பட்டுப் பின்னர் திரைப்படமாக்கப்பட்டுப் புகழ்பெற்ற சில இலக்கியப் படைப்புகளையும் இக்கட்டுரையில் அடையாளப்படுத்தியுள்ளார் (சிவலிங்கம், 2020).

2020 ஆம் ஆண்டு "தமிழ் வளர்த்த சினிமா கவிஞர்கள்" எனும் கட்டுரையை எழுதியுள்ளார். தமிழ் சினிமாவில் இசைத்துறையில் சிறந்து விளங்கிய பாடலாசிரியர்களையும் கவிஞர்களையும் அடையாளப்படுத்தும் இக்கட்டுரை, அவர்களின் பாடல்கள் இளையோர் முதல் பெரியோர் வரை காதலாகவும் தத்துவமாகவும் ஏற்படுத்திய தாக்கங்களை விவரிக்கிறது.

2020 ஆம் ஆண்டு வெளியான "க.பெ. ரணசிங்கம்..." எனும் கட்டுரையில், "க.பெ. ரணசிங்கம்" திரைப்படத்தின் சமூகப் பரிமாணங்களை வெளிப்படுத்தியுள்ளார். புலம்பெயர் தொழிலாளர்களின் அவலங்களை மையமாகக் கொண்ட இத்திரைப்படம் குறித்துப் பின்வருமாறு எழுதியுள்ளார்: 'வேலை வாய்ப்பு ஏஜண்டுகளையும், வேலை வழங்கும் நாடுகளையும், அந் நாட்டுக் கம்பெனிகளையும், வீட்டுத் தொழில் வழங்கும் தனி நபர்களையும் சொந்த நாட்டு அரசாங்கத்தால் அறிந்திருக்க வேண்டிய அவசியத்தையும் இப்படம் சிந்திக்க வைக்கின்றது.' (சிவலிங்கம், 2020).

2020 ஆம் ஆண்டு வெளியான "நமது கலைத்துறை... சுதேசிய வளர்ச்சியில் நிமிர வேண்டும்..." எனும் கட்டுரையில், இலங்கையில் உள்ளூர் கலைத்துறை எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும், உள்ளூர் கலைஞர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிய அங்கீகாரம் மற்றும் சுதேசியக் கலை வளர்ச்சியின் அவசியம் பற்றியும் பேசியுள்ளார்.

2020ஆம் ஆண்டு "சாந்தி எனது நண்பன்.. ஆத்மார்த்தம் நிறைந்த சமூகஜீவி.. கருத்தியல்வாதி" என்ற தலைப்பில் நந்தலாலா, தீர்த்தக்கரை ஆகிய இரண்டு நூல்கள் வெளிவர காரணமாக இருந்த சட்டத்தரணி சாந்திகுமாரின் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் வலைதளப் பதிவொன்றினை பதிவேற்றம் செய்துள்ளார். 2017ஆம் ஆண்டு "கரிகாற்சோழன் விருது" எனும் தலைப்பில் தனது வரலாற்று நெடுங்கதைக்கு தான் விருது பெற்றுக் கொண்ட அனுபவத்தினைப் பதிவிட்டுள்ளார்.

IX. ஆய்வுக் கட்டுரைகள்

மு.சிவலிங்கம் அவர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான ஆய்வரங்குகளில் பங்கேற்றுத் தன் ஆய்வுப் படைப்புகளைச் சமர்ப்பித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ' மலையக இலக்கியமும் அரசியலும்' என்ற தொனிபொருளில் கட்டுரை எழுதிய வாசித்துள்ளதோடு 2004 ஆம் ஆண்டில் புதுச்சேரியில் உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகம் நடத்திய உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அதே தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்துள்ளார். மேலும், 2019 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்ற ஆய்வரங்கில், "கானா பாடல்கள்" எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்துள்ளார். மலையகத்தில் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில் இசையின் சக்தியும் அதன் பங்களிப்பும் எவ்வாறமைந்துள்ளன என்பதை மையமாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

X. நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்கள்

மு.சிவலிங்கம் அவர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இணைய ஊடகங்கள் மற்றும் இலக்கியச் சந்திப்புகளில் கலந்துகொண்டு தனது அனுபவங்கள், மலையக வாழ்வியல் மற்றும் இலக்கியக் கருத்துக்களைத் தொடர்ச்சியாகப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

அந்தவகையில் 2023ஆம் ஆண்டு "டான் தமிழ் ஒளியில் ஸ்பார்ட்லைட்" எனும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நேர்க்காணலை வழங்கியுள்ளார். 2021ஆம் ஆண்டு நம் தமிழின் 'கதைப்பமா' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நேர்காணல் ஒன்றில் பங்குபற்றியுள்ளார். 2021ஆம் ஆண்டு 'ஆளுமையுடன் ஓர் உரையாடல்' எனும் தலைப்பிலமைந்த நிகழ்ச்சியொன்றில் மேமன்கவியுடன் கலந்துரையாடலில் பங்குபற்றியுள்ளார். 2020ஆம் ஆண்டு

மலேசிய இயல் பதிப்பகம் நடத்திய 'இலங்கை தமிழ் எழுத்தாளர் இலக்கிய அறிமுக நிகழ்விலும்' கலந்து கொண்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு நேத்ரா தொலைக்காட்சியில் பிரவாகம் நிகழ்ச்சியின் நேர்க்காணலில் கலந்துகொண்டுள்ளார். 2017ஆம் ஆண்டு ரூபாவாஹினி தொலைக்காட்சியில் 'புன்னகை' எனும் நேர்காணல் ஒன்றிலும் கலந்து கொண்டுள்ளார்.

பொது நிகழ்வுகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் நடத்தும் விழாக்களிலும் மு.சிவலிங்கம் முக்கிய உரையாற்றி வந்துள்ளார். 2020 ஆம் ஆண்டு "கொட்டகலை ஆசிரியர் கலாசாலையில்..." எனும் தலைப்பிலான பதிவில், கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்ற கலை விழாவிலும் "கலையருவி" நூல் வெளியீட்டு விழாவிலும் தான் ஆற்றிய உரை குறித்துப் பதிவு செய்துள்ளார். இவ்விழாவில் "வரலாற்றில் பெரும்பான்மை இனங்களால் சிறுபான்மை இனங்களின் கலை, இலக்கிய, கலாசார, பாரம்பரியங்கள் எவ்வாறு அழிக்கப்பட்டு வந்தன, வருகின்றன?" எனும் தலைப்பில் தனது கருத்தாழமிக்க உரையை நிகழ்த்தியுள்ளார். இவ்வாறாக, மு.சிவலிங்கம் சிறுகதை, நாவல், கவிதை, மொழிபெயர்ப்பு, பத்திரிகைக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையப் பதிவுகள் எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களில் தனது ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன், அச்சு ஊடகங்கள் மட்டுமன்றித் தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணைய ஊடகங்களின் வழியே பல நேர்காணல்களிலும் கலந்துரையாடல்களிலும் பங்கேற்றுத் தன் சமூக-அரசியல் கருத்துகளைப் பரந்த அளவில் மக்களிடம் கொண்டு சேர்த்துள்ளார்.

இவ்வகையில், ஆசிரியரின் படைப்புகள் மற்றும் நேர்காணல்களின் பட்டியலும் அவற்றின் உள்ளடக்கமும் வருமாறு காணப்படுகின்றது.

வகை	தலைப்பு	உள்ளடக்கம்
கேலிச்சித்திரம்	கங்காணி-காளிமுத்து	மலையகம்
ஓரங்க நாடகம்	எமதர்மன் விசாரணை	பொது
நகைச்சுவைக் கட்டுரை	மச்சானைக் கேளுங்கள்	மலையகம்
வினா - விடை	கங்காணியைக் கேளுங்கள்	மலையகம்
வானொலி நாடகம்	பீலிக்கரை	மலையகம்
கவிதை	ஆனால்	மொழிபெயர்ப்பு
	குறிஞ்சிக்கும்மி, குறிஞ்சி வாழ் கோதை	மலையகம்
நாவல்	பஞ்சம் பிழைக்க வந்த சீமை	மலையகம்
	உயிர்	பொது
சிறுகதை	மலைகளின் மக்கள் ஒரு விதை நெல்	மலையகம்
	ஒப்பாரிக்கோச்சி வெந்து தணிந்தது காலம் சிறுவர் பண்ணைகள் ஒரு மழைகாலத்து வெயில் வழித்துணை கிட்னி கிடைக்கும் இடம் பிச்சைக்காரன்	பொது (பெரும்பாலான கதைகள் மலையகம் சார்ந்தவையாகவே காணப்படுகின்றன. 83 சிறுகதைகளில் 28 சிறுகதைகள் பொதுவான உள்ளடக்கம் சார்ந்தவையாகக்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

		காணப்படுகின்றன.
மொழிபெயர்ப்பு	தேயிலை தேசம் (Born to Labour)	மலையகம்
தொகுப்பு நூல்	மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள்	மலையகம்
பத்திரிகைக் கட்டுரைகள்	05	மலையகம்
கட்டுரைகள் மற்றும் வலைதளப்பதிவுகள்	10 06	மலையகம் சார்ந்தவை பிற உள்ளடக்கம்
ஆய்வுக் கட்டுரைகள்	03	மலையகம் சார்ந்தவை
நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்கள்	08	பொது

அட்டவணை 01

மேல்வரும் அட்டவணையின் அடிப்படையில் ஆசிரியர் பெரும்பாலான படைப்புகள் மலையகம் சார்ந்த உள்ளடக்கத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளமையைக் காணலாம்.

XI. தொகுப்புரை

மலையக மக்களின் வாழ்க்கைக் கோலங்களையும், வாழ்வியலையும் பிரதிபலிக்கும் வகையில் படைக்கப்பட்ட புனைகதைள் பலவுள்ளன. இவ்வகையில், மலையகம் சார்ந்த வாழ்வியற் கூறுகளை பேசுபொருளாகக் கொண்டு பல இலக்கியங்களைப் படைத்த ஈழத்து இலக்கியவாதிகளுள் ஒருவராகக் காணப்படும் மு.சிவலிங்கம், அறுபதுகளிலிருந்து படைப்பிலக்கியங்களின் வழி மலையக மக்களின் வாழ்வியல், பண்பாட்டுக்கூறுகளின் உள்ளடக்கத்தினைக் கொண்டு வெறும் பொழுதுபோக்குக்காக அன்றி சமுதாயத்தின் வளர்ச்சிக்கு வழி காட்டும் நோக்கத்தோடு இலக்கியங்களைப் படைத்துள்ளார். நாவல்கள், சிறுகதைகள் போன்ற அவரது படைப்புகள் மலையகத்தின் அறியப்படாத வாழ்வியல் விடயங்களை காலம் கடந்தும் கண்முன் கட்டமைக்கின்றன. இவ்வகையில் காலத்திற்கேற்ற கருப்பொருட்களைக் கொண்டு அன்றாட வாழ்வின் யதார்த்தங்களை புனைகதை வடிவில் படைப்புலகிற்குத் தந்த மு.சிவலிங்கத்தின் இலக்கியப் பணியும் அவரின் வகிபாகமும் குறிப்பிடத்தக்க விடயங்களாக கருதப்படுகின்றன. வீரகேசரி பத்திரிகையில் சில காலம் பணிபுரிந்த இவர், நகைச்சுவை கேலிச்சித்திரம், ஓரங்க நாடகத் தொடர், நகைச்சுவைக் கட்டுரை போன்ற பகுதிகளினூடாகவும், ஜனநாயகத் தொழிலாளி பத்திரிகையில் பணிபுரிந்த காலத்தில் கங்காணியைக் கேளுங்கள் என்ற கேள்வி -பதில் பகுதியினூடாகவும் மலையகம் மற்றும் பிற பிரதேசங்கள் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்தியுள்ளார். வானாலி நாடகம் எழுதுதல், நாடகம் மற்றும் திரைப்படங்களில் நடித்தல் என பல துறைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

பின்னர் பத்திரிகைத் துறையிலிருந்து இடைவிலகி ஆசிரியராகத் தனது கடமையினைத் தொடர்ந்துள்ளார். பின்னர் ஆசிரியப் பணியினைத் தொடர்ந்து பத்திரிகையாளனாகத் தன்னை வளர்த்துக் கொண்டவர் பாடசாலை காலத்து அனுபவம், தொழில் அனுபவம் என்பவற்றின் துணையோடு அரசியலில் ஈடுபட்டுள்ளார். சிறுகதைப் படைப்பாளர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், பத்திரிகையாளர் விமர்சகர் என்று பல்வேறு துறைகளிலும் தன்னுடைய திறமையை வெளிப்படுத்தியுள்ள சிவலிங்கம் பல்துறை ஆளுமைமிக்கவராகக் காணப்படுகின்றார். இவ்வாறாக, 1960 ஆம் ஆண்டு முதல் தன்னுடைய இலக்கியப் பணியைத் தொடங்கிய ஆசிரியர் அரசியல், பத்திரிகை, கல்வி எனப்பல துறைகளிலும் தன்னை வெளிப்படுத்தியுள்ளார். பாடசாலை முதற்கொண்டே எழுத்துத்துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளதோடு, மலையகம், மலையகம் சாராதவை, தன் அனுபவப் பகிர்வு, பிற படைப்பாளர்கள் பற்றிய குறிப்புகள், படைப்புகள் மற்றும் திரைப்படங்கள் பற்றிய விமர்சனம் என்பவற்றை கேலிச்சித்திரங்கள், வானொலி நாடகம், பத்திரிகைக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், வலைபக்கப் பதிவுகள், ஆய்வுக்கட்டுரைகள், படைப்பிலக்கியம் என்பவற்றின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

உசாத்துணை நூல்கள்

சிவலிங்கம், மு. (1992). *மலைகளின் மக்கள்.* வீரகேசரி பிரசுரம்.

——— (2003). *தேயிலை தேசம்.* துரைவி பதிப்பகம்.

——— (2005). *ஒரு விதை நெல்.* மணிமேகலைப் பிரசுரம்.

——— (2007). *மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள்.* குறிஞ்சித் தமிழ் இலக்கிய மன்றம்.

——— (2010). *ஒப்பாரிக் கோச்சி.* நாவல் நகர் தமிழ்ச்சங்க வெளியீடு.

——— (2013). *வெந்து தணிந்தது காலம்.* மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்.

——— (2015). *பஞ்சம் பிழைக்க வந்த சீமை.* மணிமேகலைப் பிரசுரம் ஃ சுய வெளியீடு.

——— (2016). *சிறுவர் பண்ணைகள்.* தமயந்தி பதிப்பகம்.

——— (2018). *உயிர்.* தமயந்தி பதிப்பகம்.

வலைதள முகவரிகள்

……., "தேசிய அடையாளமின்றி அரசியல் விபரீதங்களை சந்திக்கும்'இந்தியத் தமிழர்கள்." Moomaseena, 2017.02.12, Accessed date 01.12.2023{ https://www.musivalingam.com/2017/02/indian-tamils-in-srilanka-musivalingam.html}

சிவலிங்கம்.மு., "தொழிற்சங்க அரசியல்வாதிகளுக்கு எதிராகச் சட்டம் உருவாக்கப்படவேண்டும்,", Moomaseena, 2018.12.01, Accessed date 01.12.2023 { https://www.musivalingam.com/p/trade-union-politicians-in-sri-lanka.html}

……., "இன்று உலக சிறுபான்மை இனங்களின் உரிமைத் தினமாகும்." Moomaseena, 2020.12.01, Accessed date 01.12.2023{https://www.musivalingam.com/search/label/%E0%AE%95%E0%AE 9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AF%81%E0%AE%B0}

……., " 'வாக்குறுதி' என்ற குறுந்திரைப்படம்." Moomaseena, 2020.12.01, Accessed date01.12.2023{ https://www.musivalingam.com/search/label/%E0%AE%95%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AF%81% E0%AE%B0}

……., "மலையகத் தமிழ்ச் சிறுகதைகளில் மத்திய தர வர்க்கம்." Moomaseena, 2020.12.01, Accessed date 01.12.2023{ https://www.musivalingam.com/search/label/%E0%AE%95%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AF%81%E0% AE%B0}

……., "க.பெ.ரணசிங்கம்..." Moomaseena, 2020.12.01, Accessed date 01.12.2023{ https://www.musivalingam.com/search/label/%E0%AE%95%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AF%81%E0% AE%B0}

……., "நமது கலைத்துறை … சுதேசிய வளர்ச்சியில் நிமிர வேண்டும்." Moomaseena, 2020.12.01, Accessed date 01.12.2023{ https://www.musivalingam.com/search/label/%E0%AE%95%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AF%81%E0% AE%B0}

சிவலிங்கம்.மு., **"சட்டங்களுக்குற்பட்ட பிரஜாவுரிமையும், திணைக்களத்துக்குற்பட்ட ஆள்பதிவும் நீக்கப்பட வேண்டும்" தினக்குரல், 19.02.2017**

சிவலிங்கம்.மு.**"புதியகாற்று படத்தில் மாயாண்டி தோட்டத் தலைவராக மு.சிவலிங்கம்", வாரமஞ்சரி, 2018.11.18 (http://www.vaaramanjari.lk/2018/11/18/பத்திகள்ஃசினிமா-வாசனையே இல்லாதவர்களால் தயாரிக்கப்பட்ட-தோல்விப்-படமே-பொன்மணி)**

……., "மலையக சமூகம் எழுச்சி பெற இலக்கியவாதிகளே காரணம்" Moomaseena, 2018.12.01, Accessed date 01.12.2023{ https://www.musivalingam.com/2020/05/blog-post.html}

காணொளிகள்

சிவலிங்கம். மு., 'புன்னகை" நேத்ரா டீ.வீ, 08-05-2013. காணொளி, (https://youtu.be/qeL9wYGlLGg)

……. , 'பிரவாகம்' நேத்ரா தொலைக்காட்சி, 11-08-2019, காணொளி, (https://www.youtube.com/watch?v=fQ3t4axJ9Lc&t=1s)

மலேசிய இயல் பதிப்பகம், 'இயல் அரங்கம்' 12-08-2020, காணொளி, (https://www.youtube.com/watch?v=-l1uhgZqvBQ&t=1s)

…….. 'கதைப்பமா' நம் தமிழ் வானொலி 11.02.2021, காணொளி, (https://www.youtube.com/watch?v=MRCU7NmfMJ4&t=96s)

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்